DEPOSITION OF WITNESS
(In the Court of the Subordinate Judge`s Sankarankovil)
MCOP .No.39/2021
****

Deposition of Witness for : RW1

Name : **ராஜீவ்**

Father`s Name :

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

Date : 04.08.2025

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

முதல் விசாரணை

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் தற்போது வட்டார போக்குவரத்து அலுவலகம் சங்கரன்கோவிலில் இளநிலை உதவியாக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து எங்கள் அலுவலகத்திற்கு அழைப்பாணை வந்தது. எங்கள் அலுவலகத்தில் எனக்கு சாட்சியம் அளிப்பதற்காக வழங்கப்பட்ட அனுமதி கடிதம் **சா.சா.ஆ 1** ஆகும். அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ஓட்டுநர் பெயர் கணேசமூர்த்தி த.பெ திம்மையா, 56, ரெங்கசமுத்திரம் காரிச்சாத்தான், சங்கரன்கோவில் என்பவருக்கு விபத்து சமயத்தில் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்காக மேற்படி ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் அவருக்கு வழங்கப்படவில்லை. மேற்படி ஓட்டுநருக்கு நான்கு சக்கர வாகனம் ஓட்டுவதற்கான உரிமம் மட்டும வழங்கப்பட்டுள்ளது. TN 79 8014 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் ஆய்வின் போது மேற்படி ஓட்டுநருக்கு இருசக்கர வாகனம் ஓட்டுநர் உரிமம் இல்லை என குறிப்பிட்டுள்ளது. TN 79 8014 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை உண்மை நகல் **சா.சா.ஆ.2** ஆகும். மேற்படி ஓட்டுநர் கணேசமூர்த்தி என்பவர் ஓட்டுநர் உரிம பதிவேடு உண்மை நகல் **சா.சா.ஆ.3** ஆகும்.

மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை

மேற்படி சா.சா.ஆ.3 ஆவணம் எங்களுடைய அலுவலக கணிணியில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஓட்டுநர் வேறு ஒரு அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் பெற்றிருந்தால் எங்களுடைய அலுவலக கணிணியில் துலங்காது என்றால் சரிதான். மேற்படி ஓட்டுநருக்கான உரிமத்தினை பதிவேற்றம் செய்கையில் தவறுகள் இருந்ததால் ஓட்டுநர் உரிமம் குறித்து தெரியவராது என்றால் அதுகுறித்துதெரியாது. வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஆய்வில் அசல் ஓட்டுநர் உரிமம் தாக்கல செய்யப்படவில்லை என்றால் ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சான்றளிப்பார்கள் என்றால் சரிதான். மேற்படி ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்பதற்கு சா.சா.ஆ.3 வைத்து தீர்மானிக்க இயலாது என்றால் சரியல்ல.

ம.வி இல்லை.